## Press coverage of the Cassava Field Day organized on the theme "India's Success in Classical Biological Control of the Invasive Insect Pest, Cassava Mealybug" on 13 November 2025 at Rasipuram, Namakkal District, Tamil Nadu.

The ICAR–National Bureau of Agricultural Insect Resources (NBAIR), Bengaluru, organized the "Cassava Field Day" in a grand manner on 13 November 2025 at Rasipuram, Namakkal District, Tamil Nadu. The event marked India's remarkable success in the biological control of the cassava mealybug (*Phenacoccus manihoti*) through the introduction of its efficient parasitoid, *Anagyrus lopezi*.

The programme attracted more than 500 participants, including farmers, scientists, policymakers, and representatives from industries, and showcased how scientific innovation and farmer participation together revived cassava cultivation in South India after a devastating pest outbreak. The event was graced by the presence of Sh. V. S. Matheswaran, Hon'ble Member of Parliament (Namakkal Constituency); Sh. K. R. N. Rajeshkumar, Hon'ble Member of Parliament (Rajya Sabha); Dr. V. S. Mathiventhan, Hon'ble Minister for Adi Dravidar Welfare, Government of Tamil Nadu; Sh. A. K. P. Chinraj, Ex-MP (Namakkal Constituency); and Dr. Poonam Jasrotia, ADG (PP&B), ICAR, New Delhi. Senior officers from the Department of Horticulture and Plantation Crops, Department of Agriculture, Government of Tamil Nadu, Central Integrated Pest Management Centre (CIPMC), State Agricultural Universities, and Krishi Vigyan Kendras also participated in the event.



Registrar of News Papers for India. Regn No.33800/1983
Postal Regn. No.TN / WR / SLM (E) / 35 / 2025–2027

ராசிபுரத்தில்

### மரவள்ளியில் வயல்வெளி வெற்றி விழா நிகழ்ச்சி

அமைச்சர், எம்பிக்கள் பங்கேற்பு

ராசிபுரம், நவ.14: ராசிபுரத்தில் மத்திய அரசின் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கும், பெங்களூரு -தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் சார்பில், மரவள்ளி மாவுப் பூச்சி ஒட்டுண்ணி கட்டுப்படுத்தும் வயல்வெளி வெற்றி விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி, அமைக்கப்பட்டிருந்த மரவள்ளி கண்காட்சியை, தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன், எம்பிக்கள் ராஜேஸ்குமார், மாதேஸ்வரன், புது டெல்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் தாவரங்கள் மற்றும் உயிரி பாதுகாப்பு கூடுதல் தலைமை இயக்குநர் டாக்டர் பூணம் ஜெஸ்ரோஸியா, பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் இயக்குநர் டாக்டர் சுசில் மற்றும் விவசாயிகள் ஆகியோர் பார்வையிட்டனர்.

இதில் மரவள்ளி பயிரில், மாவு பூச்சி கட்டுப்படுத்தப்பட்டது குறித்து, பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவக விஞ்ஞானிகள் சம்பத்குமார், மோகன் ஆகியோர் வீடியோ படக்காட்சிகளுடன் விளக்கமளித்து பேசினர். தொடர்ந்து நாமக்கல் மாவட்ட விவசாயிகள், தங்களின் அனுபவங்களை எடுத்துரைத்தனர். இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக கூடுதல் தலைமை இயக்குநர் பேசுகையில், 'மரவள்ளி பயிர் அதிகம் பயிரிடப்படும் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மாநிலங்களில் மாவு பூச்சி தாக்குதலை கண்டறிந்து, வெளிநாட்டில் இருந்து நன்மை தரக்கூடிய ஒட்டுணியை வரவழைத்து, பெங்களூரு ஆய்வகத்தில் உற்பத்தி செய்து, நாடு முழுவதும் இலவசமாக வேளாண் அறிவியல் நிலையங்கள், மாநில அறிவியல் துறைகளோடு இணைந்து வழங்கியதால், இன்று மாவு பூச்சி தாக்குதல் பெருமளவு குறைந்துள்ளது,' என்றார்.

அமைச்சர் மதிவேந்தன் பேசுகையில், 'மாவு பூச்சி மரவள்ளி பயிரில் தாக்குதல் காணப்பட்ட உடனேயே, நமது விவசாயிகள் அதனை மத்திய, மாநில அரசுகளுக்கு தெரிவித்து, பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் நிறுவனத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா போன்ற மாநிலங்களில் மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள் போதுமான விளைச்சலை பெற்றுள்ளனர்,' என்றார். தொடர்ந்து, ராஜேஸ்குமார் எம்பி பேசுகையில், 'மரவள்ளி பயிரில் மாவு பூச்சி தாக்குதல் குறித்து, நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம், இலவசமாக ஒட்டுண்ணிகளை வழங்கியதால், விவசாயிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர். வேளாண் துறையில் அதிக உற்பத்தியை பெறுவதற்கு, இதுபோன்ற அறிவியல், உயிரி தொழில்நுட்பங்கள் பெரிதும் கைகொடுக்கின்றன,' என்றார். முதன்மை விஞ்ஞானி சுபஹரன் நன்றி கூறினார். இந்த விழாவில், நாமக்கல் மாவட்ட விவசாயிகள், வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், ஏத்தாப்பூர் மரவள்ளி ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ராசிபுரத்தில் நடந்த மரவள்ளியில் மாவுப்பூச்சி ஒட்டுண்ணி கட்டுப்படுத்தும் வயல்வெளி வெற்றி விழா நிகழ்ச்சியில், காட்சிப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை ராஜேஸ்குமார் எம்பி., பார்வையிட்டார். அருகில் மாதேஸ்வரன் எம்பி.,உள்ளார்.

24x7 Multiform TV

செய்திகள்
ஷார்ட்ஸ்
போட்டோ
வீடியோ
Advertise with us

DOWNLOAD APP FROM
GET IT ON Google Play
Download on the App Store

Home / நம்ம ஊர்

# தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR ) சார்பில், மரவள்ளி மாவு பூச்சி ஒட்டுண்ணியின் வயல்வெளி வெற்றி விழா எம்பிக்கள், அமைச்சர் பங்கேற்பு..

இராசிபுரம்

24x7

Rasipuram King 24x7 | 13 நவம்பர் 2025 7:17 PM

*தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR ) சார்பில், மரவள்ளி மாவு பூச்சி ஒட்டுண்ணியின் வயல்வெளி வெற்றி விழா எம்பிக்கள், அமைச்சர் பங்கேற்பு..*

மேலும் கண்டறிக நாமக்கல்

நாமக்கல் மாவட்டம் இராசிபுரத்தில், மத்திய அரசின், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின்கீழ் (ICAR) இயங்கும், பெங்களூரு - தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR ) சார்பில், மரவள்ளி மாவு பூச்சி ஒட்டுண்ணியின் வயல்வெளி வெற்றி விழா நிகழ்ச்சி (Anagyrus lopezi Cassava Field Day) நடைபெற்றது.. முன்னதாக, விழா அரங்கில் அமைக்கப்பட்டிருந்த மரவள்ளி கண்காட்சியை, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட, மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், பாராளுமன்ற உறுப்பினர்கள் V.S. மாதேஸ்வரன், K.R.N. இராஜேஷ்குமார் புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) (தாவரங்கள் மற்றும் உயிரி பாதுகாப்பு PP&B) கூடுதல் தலைமை இயக்குநர் Dr. Poonam Jasrotia,, பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR) இயக்குநர் Dr. S.N. Sushil,, மாவட்ட விவசாயிகள் ஆகியோர் பார்வையிட்டனர். இதில் மரவள்ளி பயிரில் மாவு பூச்சி தாக்குதலின் நிலைகள், நோய்த் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்ட பிறகு மரவள்ளி கிழங்கு விளைச்சல், பயிர் பூஸ்டர்கள், உள்ளிட்டவை இடம்பெற்றன. இந்நிகழ்ச்சிக்கு, புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (ICAR) (பயிர் மற்றும் உயிரி பாதுகாப்பு PP&B) உதவி தலைமை இயக்குநர் Dr. Poonam Jasrotia தலைமை வகித்தார். இந்தியாவில் மரவள்ளி பயிரில் மாவு பூச்சி கட்டுப்படுத்தப்பட்டது குறித்து, பெங்களூரு-தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR) விஞ்ஞானிகள் M. சம்பத்குமார், M. மோகன் ஆகியோர் வீடியோ படக்காட்சிகளுடன் விளக்கம் அளித்து பேசினர். அதனைத் தொடர்ந்து நாமக்கல் மாவட்ட விவசாயிகள் தங்களின் அனுபவ கருத்துரைகளை (Feedback) வழங்கினர். மேலும், புது தில்லி இந்திய வேளாண் ஆராய்ச்சி

தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR ) சார்பில், மரவள்ளி மாவு பூச்சி ஒட்டுண்ணியின் வயல்வெளி வெற்றி விழா எம்பிக்கள், அமைச்சர் பங்கேற்பு.. https://king24x7.com/local-news-king/-nbair--482287

[redacted]

ADG (PP&B) Dr. Poonam Jasrotia பேசும்போது, மரவள்ளி பயிர் அதிகம் பயிரிடப்படும் தமிழ்நாடு புதுச்சேரி கேரளா ஆகிய பகுதிகளில் மாவு பூச்சி தாக்குதலை கண்டறிந்து வெளிநாட்டிலிருந்து நன்மை தரக்கூடிய ஒட்டுணியை வரவழைத்து, பெங்களூரு ஆய்வகத்தில் உற்பத்தி செய்து நாடு முழுவதும் இலவசமாக வேளாண் அறிவியல் நிலையங்கள், மாநில அறிவியல் துறைகளோடு இணைந்து வழங்கியதால் இன்று மாவு பூச்சி தாக்குதல் பெருமளவு குறைந்துள்ளது என்றார். தொடர்ந்து, நிகழ்ச்சியில் பேசிய, நாமக்கல் பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் V.S. மாதேஸ்வரன் கூறும்போது, நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளி கிழங்கு பயிர் அதிகம் விளைச்சல் உள்ளதால் இப்பகுதியில் மரவள்ளி கிழங்கு ஆராய்ச்சி நிலையம் மற்றும் அரசு ஜவ்வரிசி ஆலை அமைக்க மத்திய அரசிடம் கோரிக்கை வைத்து அதனை பெற்றுத் தருவேன் என்றார். தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் A.K.P. சின்ராஜ், 2019-ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் மரவள்ளியில் மாவு பூச்சி தாக்கத்தை கண்டறிந்து, அதனை உடனடியாக மத்திய அறிவியல் துறைக்கு தெரிவித்ததன் தொடர்ச்சியாக இன்று பல்வேறு ஆய்வுகளுக்கு பிறகு மாவு பூச்சி கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றார். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் மருத்துவர். மா. மதிவேந்தன் பேசும்போது, மாவு பூச்சி மரவள்ளிப் பயிரில் தாக்குதல் காணப்பட்ட உடனேயே நமது விவசாயிகள் அதனை, மத்திய மாநில அரசுகளுடன் தெரிவித்து அரசுகளுக்கு தெரிவித்து, ICAR, NBAIR , பெங்களூரு, தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் நிறுவனத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா போன்ற மாநிலங்களில் மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள் போதுமான

[redacted]

பூச்சிகள் வள அமைவகம் நிறுவனத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா போன்ற மாநிலங்களில் மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள் போதுமான விளைச்சலை பெற்றுள்ளனர் எனக் குறிப்பிட்டார். நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றி பேசிய பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் K.R.N. இராஜேஷ்குமார், மரவள்ளி பயிரில் மாவு பூச்சி தாக்குதல் குறித்து நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் இப்பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக ஒட்டுண்ணிகளை வழங்கியதால் இன்று விவசாயிகள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர். வேளாண் துறையில் அதிக உற்பத்தியை பெறுவதற்கு இதுபோன்ற அறிவியல் / உயிரி தொழில்நுட்பங்கள் பெரிதும் கைகொடுக்கின்றன என்றார். தொடர்ந்து, பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR) இயக்குநர் Dr. S.N. Sushil,, பேசும்போது, நாமக்கல் மாவட்டத்தில் 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில், மரவள்ளியில் மாவுப் பூச்சியின் தாக்கத்தால் அதிக மகசூல் இழப்பு அதிகமாக காணப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்த, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையம், பெங்களூருவில் உள்ள எங்களது அமைவகம், ஏத்தாப்பூர் மரவள்ளி ஆராய்ச்சி மையம் ஆகிய அரசு துறைகள் இணைந்து, இந்த மாவு பூச்சியைக் கட்டுப்படுத்த நன்மை தரக்கூடிய, அனாகயிரஸ் லூப்பசி( Anagyrus lopezi) ஒட்டுண்ணியை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தி, பெருமளவில் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, மரவள்ளி மாவுப் பூச்சி முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டது என கூறினார். நிகழ்ச்சியின் நிறைவாக, பெங்களூரு, தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் (NBAIR ) முதன்மை விஞ்ஞானி Dr. K. சுபஹரன் நன்றி கூறினார். இந்த ஒரு நாள் வயல்வெளி விழாவில், நாமக்கல் மாவட்ட விவசாயிகள், வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், ஏத்தாப்பூர் மாவள்ளி ஆராய்ச்சி மையம் விஞ்ஞானிகள்,

# மரவள்ளியில் மாவுப்பூச்சித் தாக்குதல்: ஒட்டுண்ணி மூலம் கட்டுப்பாடு

## பூச்சிகள் வள அமைவகத்துக்கு பாராட்டு

ராசிபுரம், நவ.13: மரவள்ளிக் கிழங்கில் மாவுப்பூச்சித் தாக்குதலை ஒட்டுண்ணி மூலம் கட்டுப்படுத்திய பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகத்துக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

ராசிபுரத்தில் மத்திய அரசின் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் அதன் இயக்குநர் எஸ்.என். சுஷில் வரவேற்றார்.

முன்னதாக, விழா அரங்கில் அமைக்கப்பட்டிருந்த மரவள்ளி பயிர் குறித்த கண்காட்சியை சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (தாவரங்கள் மற்றும் உயிரி பாதுகாப்பு) கூடுதல் தலைமை இயக்குநர் டாக்டர் பூனம் ஜாஸ்ரோடியா, மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், நாமக்கல் மக்களவைத் தொகுதி உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், மக்களவைத் தொகுதி முன்னாள் உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ் ஆகியோர் பார்வையிட்டனர்.



விழாவில் மரவள்ளிக் கிழங்கு பயிர் குறித்த விளக்க கையேட்டை வெளியிடும் அமைச்சர் மா.மதிவேந்தன் உள்ளிட்டோர்.

கண்காட்சியில் மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலின் நிலைகள், நோய்த் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்ட பிறகு மரவள்ளிக் கிழங்கு விளைச்சல், பயிர் பூஸ்டர்கள், ஒட்டுண்ணிகள் உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் பேசும்போது, மாவுப்பூச்சி மரவள்ளிப் பயிரில் தாக்குதல் அதிகரித்து வருவது குறித்து விவசாயிகள் கவலை தெரிவித்திருந்தனர். இதையடுத்து நோய் தாக்குதலை பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் வள அமைவகம் கட்டுப்படுத்தியுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா மாநிலங்களில் மரவள்ளிக் கிழங்கு அதிக அளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், மரவள்ளிக் கிழங்கு பயிரில் மாவுப்பூச்சித் தாக்குதல் குறித்து நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையம் இப்பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக ஒட்டுண்ணிகளை வழங்கியதால் இன்று விவசாயிகள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர். வேளாண் துறையில் அதிக உற்பத்தியை பெறுவதற்கு இதுபோன்ற அறிவியல் உயிரி தொழில்நுட்பங்கள் உதவியுள்ளன என்றார்.

தொடர்ந்து பேசிய நாமக்கல் எம்.பி. வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு பயிர் அதிகம் விளைச்சல் உள்ளதால் மரவள்ளி கிழங்கு ஆராய்ச்சி நிலையம் மற்றும் அரசின் ஜவ்வரிசி ஆலை அமைக்க மத்திய அரசிடம் கோரிக்கை வைத்து அதனை பெற்றுத் தருவேன் என்றார்.

நாமக்கல் தொகுதி முன்னாள் எம்.பி. ஏ.கே.பி.சின்ராஜ் பேசுகையில், 2019 இல் நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டையில் மரவள்ளியில் மாவுப்பூச்சித் தாக்கத்தை கண்டறிந்து, அதனை உடனடியாக மத்திய அறிவியல் துறைக்கு தெரிவித்ததன் தொடர்ச்சியாக இன்று பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு அமலுக்கு வந்துள்ளது என்றார்.


மரவள்ளி மாவு பூச்சி ஒட்டுண்ணியின் (அனகைரஸ் லோபெசி)
வயல்வெளி வெற்றி விழா
Cassava Fie
ay
On the them
India's Success
Biological Control of th
Insect Pest, Ca
13.11.202
இராசி
Natio
gricu
esou
Dr. S. N. Sushil
Dr. Poonam Jasrotia
Th. V.S. Matheswaran
Th. A.K.P. Chinraj
DD தமிழ்
ன்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி -
Fri 10:09:40

ICAR–NBAIR SHOWCASES BREAKTHROUGH IN BIOLOGICAL CONTROL OF CASSAVA MEALYBUG IN INDIA



## ICAR–NBAIR Showcases Breakthrough in Biological Control of Cassava Mealybug in India

*13 November 2025, Bengaluru*

ICAR–National Bureau of Agricultural Insect Resources, Bengaluru, organized a grand 'Cassava Field Day' today at Rasipuram, Namakkal District, Tamil Nadu, highlighting India's landmark success in the biological control of the cassava mealybug (*Phenacoccus manihoti*). The event celebrated the impact of introducing its effective parasitoid, *Anagyrus lopezi*, which revitalized cassava cultivation across South India after a severe pest outbreak.

The event was graced by distinguished dignitaries, including Shri V. S. Matheswaran, Member of Parliament (Namakkal); Shri K. R. N. Rajeshkumar, Member of Parliament (Rajya Sabha); Dr. V. S. Mathiventhan, Minister for Adi Dravidar Welfare, Government of Tamil Nadu; Shri A. K. P. Chinraj, Former MP (Namakkal); and Dr. Poonam Jasrotia, Assistant Director General (PP&B), ICAR, New Delhi.



In his address as Chief Guest, Shri Matheswaran commended farmers for the timely release of parasitoids, which restored cassava yields to 30–35 tonnes per hectare. He noted that the biological control initiative has saved crores of rupees for growers in the region.

Former MP Shri A. K. P. Chinraj praised ICAR as one of the most transparent and dedicated institutions committed to advancing Indian agriculture.

Shri Rajeshkumar, MP (Rajya Sabha), also lauded ICAR–NBAIR for bringing this technology to farmers and mentioned that he, too, had benefitted from the programme.

Dr. V. S. Mathiventhan, applauded ICAR–NBAIR's efforts and recognized the critical role of parasitoids in safeguarding Tamil Nadu's cassava crops.

Dr. Poonam Jasrotia commended ICAR-NBAIR for sourcing *Anagyrus lopezi* from IITA, Benin, and for developing a successful mass-production protocol aligned with organic farming principles. She described the initiative as an exemplary model of classical biological control.

Former MP Shri A. K. P. Chinraj praised ICAR as one of the most transparent and dedicated institutions committed to advancing Indian agriculture.

Shri Rajeshkumar, MP (Rajya Sabha), also lauded ICAR–NBAIR for bringing this technology to farmers and mentioned that he, too, had benefitted from the programme.

Dr. V. S. Mathiventhan, applauded ICAR–NBAIR's efforts and recognized the critical role of parasitoids in safeguarding Tamil Nadu's cassava crops.

Dr. Poonam Jasrotia commended ICAR-NBAIR for sourcing *Anagyrus lopezi* from IITA, Benin, and for developing a successful mass-production protocol aligned with organic farming principles. She described the initiative as an exemplary model of classical biological control.

Welcoming the gathering, Dr. S. N. Sushil, Director, ICAR–NBAIR, outlined the successful classical biological control programme implemented in partnership with state departments, sago industries, and other stakeholders. He highlighted that the intervention significantly improved the Benefit–Cost Ratio from 0.857 to 1.525 with an estimated annual economic gain of ₹3,480 crore. The reduced dependency on chemical pesticides has also resulted in annual savings of approximately ₹286 crore, reaffirming the programme's transformative impact on the cassava sector.



Senior officials from the Departments of Agriculture and Horticulture, Government of Tamil Nadu, Central Integrated Pest Management Centre, State Agricultural Universities, and Krishi Vigyan Kendras also participated.

As part of the event, an exhibition showcased improved cassava varieties and advanced pest management technologies, enabling farmers to explore proven solutions for enhancing productivity and crop resilience.

More than 500 participants including farmers, scientists, policymakers, industry representatives, and officials attended the programme, which showcased how scientific innovation and community participation restored cassava productivity.

*(Source: ICAR–National Bureau of Agricultural Insect Resources, Bengaluru)*



@ Content Owned by Directorate of Knowledge Management in Agriculture

Copyrights © 2022 All Rights Reserved By Indian Council of Agricultural Research Krishi Bhavan

ICAR–NBAIR Showcases Breakthrough in Biological Control of Cassava Mealybug in India | ICAR
https://share.google/Z5f62j8Sk51s39EtZ